# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W. 3(L.W.4)
## SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Suresh Babu |
| Father Name | : | |
| Occupation | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.10.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்:11.50 p.m**

**மனுவின் பேரில் சாட்சி அழைக்கப்பட்டு 1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதி எனக்கு நினைவில்லை. நான் 2006 ஆம் வருடத்தில் தேதி மற்றும் மாதம் நினைவில்லை. மாலை 06.00 மணி இருக்கும். மாலை 06.00 லிருந்து 07.00 க்குள் இருக்கும். அந்த நேரத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் 10 பேருக்கு மேல் போனோம். ஆனால் யார் யார் என்று நினைவில்லை. எந்த வாகனத்தில் போனோம் என்றால் அரசு வாகனத்தில் TN 23 G 394 Eicher சென்றோம். அந்த வாகனத்தில் தான் அனைவரும் சென்றோம். திப்பை என்ற ஊருக்கு போனோம். அங்கிருந்து மலை பகுதி என்பதால் நாங்கள் அனைவரும் சுமார் 1 கிமீ தூரத்திற்கு நடந்து சென்றோம். நாங்கள் நடந்து செல்ல சுமார் அரை மணி நேரம் முதல் 1 மணி நேரம் வரை ஆகியிருக்கும். அங்கு சென்று பார்த்த போது சாராயம் விற்று கொண்டிருந்தார்கள். நாங்கள் எவ்வளவு தூரத்தில் பார்த்தோம் என்றால் வண்டியிலிருந்து இறங்கி நடக்கும்போது மலையில் ஆள் நடமாட்டம் இருப்பதை பார்த்தோம். அங்கு சுமார் 10 பேர் இருந்திருப்பார்கள். அந்த நபர்களில் யார் சாராயம் விற்க வந்தார்கள் என்றும் யார் சாராயம் குடிக்க வந்தார்கள் என்றும் யார் யார்

ஆடு மாடு மேய்க்க வந்தார்கள் என்றும் எங்களுக்கு தெரியாது. அதேபோல் அவர்கள் என்ன ஆடை அணிந்திருந்தார்கள் என்ன என்ன வைத்திருந்தார்கள் என்று எங்களுக்கு தெரியாது.

நாங்கள் அனைவரும் சீருடையில் தான் சென்றோம். நாங்கள் போகும்போது தனி துப்பாக்கி வைத்து கொண்டு தான் சென்றோம். நாங்கள் துப்பாக்கி வைத்து கொண்டு சீருடையில் சென்றதால் எங்களை பார்த்த அங்கிருந்த நபர்கள் ஓடிவிட்டார்கள் என்றால் 4 பேர் நின்றார்கள் மற்றவர்கள் ஓடிவிட்டார்கள். அந்த ஓடிய நபர்களை நாங்கள் தூரமாக இருந்து தான் பார்த்தோம் என்றால் சரிதான்.

யார் யார் ஓடினார்கள் என்றும் யார் யார் இருந்தார்கள் என்றும் தெளிவாக தெரியாது என்றால் சரிதான். அங்கு என்ன என்ன பார்த்தேன் என்றால் 2 துப்பாக்கிகள் இருந்தது, மற்றும் கத்தி, சாராய பாக்கெட்டுகள் ஆனால் எத்தனை பாக்கெட்டுகள் இருந்தது என்று நினைவில்லை. வேறு எந்த பொருளும் அங்கில்லை.

நாங்கள் பார்த்த துப்பாக்கி எந்த வகையான துப்பாக்கி என்றால் நாட்டு துப்பாக்கி என்று சொன்னார்கள் எனக்கு என்ன வகையான துப்பாக்கி என்று தெரியாது. 2 துப்பாக்கிகளும் ஒரே மாதிரி ஒரே அளவு கொண்டது என்றால் நினைவில்லை. கத்தி என்ன வகையான கத்தி என்றால் வெட்டு கத்தி.சுமார் 1.5 அடி இருக்குமா என்றால் 1.5 அடிக்கு கையை காண்பிக்கிறார் ஆனால் சரியாக நினைவில்லை.

என்னுடன் வந்த காவலர்கள் அந்த துப்பாக்கிகள், கத்தி மற்றும் சாராய பாக்கெட்டுகளை எடுத்து வந்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்தார்கள். அந்த பொருட்களை வண்டியில் வைத்து கொண்டு வந்துவிட்டோம் என்றால் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டோம். அவர் எடுத்து சென்று விட்டார். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

ஆனால் எந்த தேதியில் விசாரித்தார் என்று நினைவில்லை. அது தவிர்த்து வேறு இந்த வழக்கு சம்மந்தமாக வேறு யாரும் என்னை விசாரிக்கவில்லை.

நான் என்னுடைய உயர் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் ரெய்டுக்கு சென்றதாகவும், அங்கிருந்த ஆடு மேய்த்து கொண்டிருந்த மலை வாழ் மக்களை பார்த்து எங்கள் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சுட்டதாகவும், அவர் காலில் குண்டு பாய்ந்ததால் இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக ஆஜர் எதிரிகள் மீது சாராயம் விற்றதாகவும், துப்பாக்கி வைத்து கொண்டு சுட முயற்சித்ததாகவும் உயர் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. நேரம்–12.20 p.m**

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–நேரம்–2.55 p.m**

இந்த சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் சரவணன் என்ற காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். அவர் தான் ரெய்டுக்கு வந்தவர்.என்னை என்றைய தேதியில் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரியாக நினைவில்லை. என்னை விசாரித்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். அதனால் தான் முதல் விசாரணையில் 4 எதிரிகள் இருந்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

முனிரத்தினம் என்பவர் அந்த இடத்திற்கும் போகவில்லை என்றாலும் வாக்குமூலத்தை படித்து பார்த்து பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 03.00 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2025.10.13 18:06:47 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்